(6) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு பந்தய வரி (இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 50/72).

மாண்புமிகு திரு. செ. மாதவன் : துணைத் தலைவரவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1972-ம் ஆண்டு பந்தய வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு @(சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 50/72) பரிந்துரைகள் செய்வதற்காக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று நான் முன்மொழிகிறேன்.

குதிரைப் பந்தய வரிக்கு மேல் வரி விதிக்க வகை செய்வதற்காக தமிழ்நாடு 1935-ம் ஆண்டு குதிரைப் பந்தய வரிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 20/1935), தமிழ்நாடு 1971-ம் ஆண்டு 44-வது சட்டத்தால் 1971-ல் திருத்தப்பட்டது. மேல்வரி 1972 ஜனவரி 1-ம் நாளிலிருந்து விதிக்கப்பட்டுள்ளது. "பந்தய கணிப்புப் பொறி வரி" மீது மேல்வரி விதிப்பதற்கு 1971-ம் ஆண்டு சட்டம் வகை செய்யவில்லை. ஆனால், "பந்தய கணிப்புப் பொறி வரி" மீதும் 1972-ம் ஆண்டு ஜனவரி 1-ம் நாளிலிருந்து மேல் வரி வசூலிக்கப்பட்டது. இவ்வாறு வசூல் செய்த தற்குச் செல்திறன் அளிக்கப்பட வேண்டியிருந்தது. மற்றும் "பந்தய கணிப்புப் பொறி வரி"-க்கும் தொடர்ந்து மேல் வரி விதிக்கப்பட வேண்டுமென்பதுதான் குறிக்கோள். எனவே, இக்குறிக்கோளுக் கிணங்க, சட்டத்தை அவ்வாறு திருத்துவது அவசியமெனக் கருதப் பட்டது. மேற்கண்ட குறிக்கோளை எய்துவதற்காக தமிழ் நாடு 1972-ஆம் ஆண்டு குதிரைப் பந்தய (இரண்டாவது திருத்த) அவசரச் சட்டம் (தமிழ் நாடு அவசரச் சட்டம் 4/72) 1972 நவம்பர் 21-ம் நாளன்று சாற்றுரைக்கப்பட்டது.

சட்ட மன்றத்தின் முன்னுள்ள இச்சட்ட வரைவு, சட்ட மன்றத்தின் ஒரு சட்டத்தின் மூலம் மேற் சொன்ன அவசரச் சட்டத்தை ரத்து செய்ய விழைகிறது.

சட்ட மன்றத் துணைத் தலைவரவர்களே, இச்சட்ட வரைவை இம் மேலவை ஏற்குமாறு வேண்டுகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் : மன்றத்தின் முன் உள்ள கேள்வி :

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972-ம் ஆண்டு பந்தய வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 50/72) பரிந்துரைகள் செய்வதற்காக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்.

@13 , 133-ஆம் பக்கங்களில் இணைப்பு VI ஆக அச்சிடப்பட்டுள்ளது.

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. சட்ட முன்வடிவு, பரிந்துரைகள் செய்வதற்காக எடுத்துக் கொள்ளப் பட்டது.

(பரிந்துரைகள் இல்லை.)

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972-ம் ஆண்டு பந்தய வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 50/72) திருப்பி அனுப்பப்பட வேண்டும்" என்று நான் முன் மொழிகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் : மன்றத்தின் முன் உள்ள கேள்வி :

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1972-ம் ஆண்டு பந்தய வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 50/72) திருப்பி அனுப்பப்பட வேண்டும்".

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

6. 1972–73 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த இரண்டாவது துணை விவர அறிக்கை மீது விவாதம்—தொடர்ச்சி.

பி.ப. 5·40..

* திரு. எஸ். டி. ஆதித்தன் : தலைவர் அவர்களே, இந்தத் துணைமதிப் பீட்டில் நமக்குத் தந்திருக்கிற பிரதிப்படி மூன்று விஷயங்கள் புதிதாகவும் முக்கியமானவையாகவும் இருக்கின்றன. ஒன்று வேலையில்லாதவர்களுக்கு வேலை வாய்ப்புக்காகப் பெருவாரியான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அதில் 900 "கிராஜுவேட்" பட்டதாரிகளுக்கு வேலை கொடுப்பதற்காக வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அது முதலாவதாக சொல்ல வேண்டிய விஷயம். இரண்டாவதாகச் சொல்லவேண்டிய விஷயம், பள்ளிக்கூடத்துப் பையன்களுக்கு ஒரு வைத்திய பரிசோதனை, அதாவது அவர்கள் எவ்வளவு தூரத்திற்கு நல்லவிதமாக இருக்கிறார்கள் என்று அவ்வப்பொழுது டாக்டர்களால் பரிசோதிப்பதற்கு புதிய ஒரு திட்டம். அது கோடிட்டுக் காண்பிக்க வேண்டிய ஒரு திட்டமாகும். மூன்றுவதாக, சூரியகாந்திச் செடி இருக்கிறதல்லவா, அதை மேற்கொண்டு பயிரிடு வதற்கு விவசாயத் துறையில் கிட்டத்தட்ட ரூ. 30 லட்சம் ஒதுக்கப் பட்டிருக்கிறது. இந்த மூன்று விஷயங்கள் இந்த சந்தர்ப்பத்திலே குறிப்பிட்டுக் காட்டக்கூடியவைகளாக இருக்கின்றன.

அது மாத்திரம் அல்ல. திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்ற நிலைமையில் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். திருநெல்வேலி மாவட்டத்தில் ஏற்கெனவேஇருக்கும் மெடிக்கல் காலேஜ், அதுமாத் மல்ல